# நிந்தவூர்க் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் நெல்சிப் திட்டத்தின் பங்கு - ஓர் ஆய்வு

**எம். றிஸ்வான்†, எம்.பி.எம். சுபியான்**

சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

†mriswan2008@gmail.com

**சுருக்கம்:** அபிவிருத்தி பற்றி நோக்குகின்றபோது குறிப்பாக கிராமிய அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெறுகின்றன. பொதுவாக கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் அவர்களை சமூக, பொருளாதார, பண்பாட்டு, தொழிநுட்ப ரீதியாக மேம்பாடடையச் செய்வது கிராமிய அபிவிருத்தி என்று கூறமுடியும். "குறைவிருத்தி நாடுகளின் முன்னைய அபிவிருத்தித் திட்டங்களின் தோல்வி கிராமிய அபிவிருத்தியில் அக்கறை காட்டாமையாகும்" என பொருளியலாளர்கள் வாதிடுகின்றனர் (அன்கெரீ, கொட்டர், 1973). எனவே உலகில் கிராமங்களை நோக்கிய பார்வை, கிராமிய அபிவிருத்தி தொடர்பான சிந்தனை இன்று மிக அதிகமாகவே எழுந்துள்ளது. அதேவேளை கிராமிய அபிவிருத்தி தொடர்பில் அரச மற்றும் அரசு சார்பற்ற பல்வேறு அமைப்புக்கள் பங்களிப்புச் செய்துவருவதனைக் காணலாம். குறிப்பாக வளர்ந்த நாடுகளை விட வளர்முக (கிழக்காசிய, ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க) நாடுகளில் இத்தகைய பணிகள் அதிகம் நடைபெறுவதனை சுட்டிக்காட்டலாம். இதன் பின்னணியில்தான் இவ்வாய்வானது கிராமிய அபிவிருத்தி தொடர்பில் நடைமுறையில் உள்ள நெல்சிப் (North East Local Services Improvement Project - NELSIP) திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டமானது இலங்கையில் குறிப்பாக வட-கிழக்கு பிரதேசங்களிலுள்ள பின்தங்கிய கிராமங்களை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். எனவே, நெல்சிப் திட்டமானது கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் பிரதேச சபையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே இவ்வாய்வானது நிந்தவூர் பிரதேச மேம்பாட்டில் நெல்சிப் எத்தகைய பங்கினைக் கொண்டுள்ளது என்பதை கண்டறிவதாகவுள்ளது. நிந்தவூர்க் கிராமிய அபிவிருத்திப் பணியில் பிரதேச சபை, பிரதேச செயலகம், சமுதாய மைய அமைப்புக்கள் (Community Based Organizations) மற்றும் ஏனைய நிறுவனங்கள் பங்களிப்புச் செலுத்துகின்ற அதேவேளை நெல்சிப் திட்டத்தின் பங்களிப்பு எவ்வாறுள்ளது என்பதை அறிதல் ஆய்வுப் பிரச்சினையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது நெல்சிப் திட்டம் நிந்தவூர் கிராமிய அபிவிருத்திப் பணியில் எத்தகைய பங்களிப்பினைச் செலுத்துகின்றது என்பதை பரிசீலனை செய்வதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன் நெல்சிப் திட்டத்தின் நடைமுறையின் பின்னர் நிந்தவூர் பிரதேச அபிவிருத்தியில் ஏற்பட்ட முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட நோக்கங்களைக் கொண்டுள்ளது. இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மூலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. முதலாம் நிலை தரவில் வினாக்கொத்து (Questionnaire), பேட்டி காணல் (Interview), அவதானம் (Observation), இலக்குக் குழுக்களுடனான கலந்துரையாடல் (Focus Group Discussion - FGD) போன்றவை அடங்குகின்றன. இரண்டாம் நிலைத் தரவில் முக்கியமாக பிரதேச செயலக அறிக்கைகள் அடங்குகின்றன. இவ்வாறு சேகரிக்கப்படும் தரவுகளைக் கொண்டு எண்ணளவான முறை (Quantitative method), மற்றும் தர அளவிலான முறை (Qualitative method) என்வற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

நிந்தவூர் கிராமிய அபிவிருத்திப் பணியில் நெல்சிப் திட்டமானது காத்திரமான பங்களிப்பினைக் செலுத்தியுள்ளதோடு, இத்திட்டத்தின் வருகையின் பின்னர் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம், பொது மைதான விருத்தி, உள்ளூர் வீதி அபிவிருத்தி, சமய ஸ்தலங்களின் புனர்நிர்மானம், சந்தை வசதி ஏனைய பொதுவசதிகளில் காத்திரமான முன்னேற்றம் அடையப்பட்டுள்ளமை இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இன்று கிராமிய அபிவிருத்தி பற்றியும் அதுனூடான தேசிய அபிவிருத்தியை அடைதல் பற்றியும் அனேக வளர்முக நாடுகள் பேசிக்கொண்டிருக்கின்றன. அதேநேரம் இலங்கை அரசாங்கமும் கிராமிய அபிவிருத்தி தொடர்பில் அக்கறை செலுத்துவதனையும் காணலாம். குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள கிராமங்களை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட நெல்சிப் திட்டமானது காத்திரமான ஒன்றாக உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே இந்த நெல்சிப் திட்டத்தின் நடைமுறைக்கும் கிராமிய மேம்பாட்டுக்குமிடையில் நேரடித் தொடர்பிருப்பதனை காணமுடிகின்றது. எனவே, இத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது கிராமிய மேன்பாட்டுடன் கூடிய தேசிய அபிவிருத்தியை சாத்தியமாக்கலாம்.